AL/2023(2024)/44/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

**44 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன்** மூலம் காட்டுக.

**1.** இஸ்லாம் என்ற சொல் 'ஸில்ம்' என்ற அறபுச் சொல்லிலிருந்து பிறந்துள்ளது. இதன் நேரடிக் கருத்து
(1) இஸ்லாமாகுதல் (2) சாந்தி (3) தனித்துவம்
(4) ஏகத்துவம் (5) தூதுத்துவம்

**2.** தொழுகையின் மூலம் மனிதன் அடையும் பயன்களுள் ஒன்றென அல் குர்ஆன் குறிப்பிடுவது யாது?
(1) தொழுகை தீய செயல்களிலிருந்து தடுக்கின்றது.
(2) தொழுகை சமத்துவத்தைப் போதிக்கின்றது.
(3) தொழுகை ஓர் உடற்பயிற்சியாகும்.
(4) தொழுகையை ஐவேளையும் நிறைவேற்ற வேண்டும்.
(5) தொழுகை ஒற்றுமையை ஏற்படுத்தும்.

**3.** இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள்
(1) அல் குர்ஆனும் ஸுன்னாவுமாகும். (2) அல் குர்ஆனும் இஜ்மாஉமாகும்.
(3) ஸுன்னாவும் இஜ்திஹாதுமாகும். (4) இஜ்மாஉம் கியாஸுமாகும்.
(5) ஸுன்னாவும் இஜ்மாஉமாகும்.

**4.** மனிதன் நிறைவேற்ற வேண்டிய மூன்று பணிகளைக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) ஈமான், இபாதத், இமாரத் (2) இபாதத், இக்லாஸ், கிலாபத்
(3) ஈமான், இமாரத், தொழுகை (4) ஈமான், இக்லாஸ், இபாதத்
(5) இபாதத், இமாரத், கிலாபத்

**5.** "முஹம்மது (ஸல்) அவர்களது பாதத்தில் ஒரு முள் தைப்பதைக் கூட நான் விரும்பமாட்டேன்". என்று அபூஸுப்யானிடம் கூறிய ஸஹாபி
(1) ஸைத் இப்னு தஸினா (ரழி) (2) அர்கம் (ரழி) (3) பிலால் (ரழி)
(4) அலி (ரழி) (5) முஆத் இப்னு ஜபல் (ரழி)

**6.** தஜ்ஜால் வெளிப்படும்போது நீதியான ஆட்சியை நிலைநாட்டுபவர் யார்?
(1) இமாம் மஹ்தி (2) துல்கர்னைன் (3) ஈஸா (அலை)
(4) மூஸா (அலை) (5) முஹம்மது (ஸல்)

**7.** மிக உயர்ந்தது என அறிஞர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ள ஷபாஅத் எது?
(1) நரகில் வீழ்ந்து தண்டனை அனுபவிக்கும் முஃமின்களில் ஒரு பகுதியினரை விதிக்கப்பட்ட தண்டனை முடியுமுன்னரே நரகிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கான ஷபாஅத்.
(2) சுவர்க்கவாசிகள் சிலருக்கு சுவர்க்கத்தில் அவர்களது தரத்தை உயர்த்துவதற்கான ஷபாஅத்.
(3) அனைத்து மனிதர்களுக்காகவும் மஹ்ஷர் வெளியின் பயங்கரத்திலிருந்து பாதுகாக்கவும், விசாரணையின்றி சுவர்க்கம் செல்ல அனுமதிக்குமாறு செய்யப்படும் ஷபாஅத்.
(4) முஃமின்களில் ஒரு பிரிவினரை விசாரணையின்றி சுவர்க்கம் செல்ல அனுமதிக்குமாறு செய்யப்படும் ஷபாஅத்.
(5) நபி (ஸல்) அவர்கள், தனக்கும் அனைத்து மனிதர்களுக்காகவும் செய்யும் ஷபாஅத்.

[பக். 2 ஐப் பார்க்க

8. கால மாற்றம், சமூகங்களின் தன்மை என்பவற்றுக்கேற்ப வேறுபட்டதாக அமைவது,
(1) தீனாகும். (2) ஈமானாகும். (3) இஸ்லாமாகும்.
(4) அஸ்ஸுன்னாவாகும். (5) ஷரீஆவாகும்.

9. அல் குர்ஆனை அடியொற்றி வளர்ந்த கலைகள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) உலூமுல் குர்ஆன் (2) உலூமுல் ஹதீஸ் (3) இல்முத் தப்ஸீர்
(4) உஸூலுல் பிக்ஹ் (5) உஸூலுத்தீன்

10. இஸ்லாமிய வரலாற்றில் இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டதாகக் கருதப்படும் காலப்பிரிவு
(1) ஹிஜ்ரி 1 ஆம் நூற்றாண்டு முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பிரிவாகும்.
(2) ஹிஜ்ரி 3 ஆம் நூற்றாண்டாகும்.
(3) தாபிஈன்களின் காலப்பிரிவாகும்.
(4) ஹிஜ்ரி 4 ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பிரிவாகும்.
(5) நவீன காலப்பிரிவாகும்.

11. குதிரைக்கும் ஸகாத் விதியாக்கிய கலீபா
(1) அபூபக்ர் (ரழி) (2) முஆவியா (ரழி) (3) உஸ்மான் (ரழி)
(4) அலி (ரழி) (5) உமர் (ரழி)

12. மு∴தஸிலா கோட்பாட்டை ஏற்க மறுத்ததன் காரணமாக கலீபா ம∴மூனால் துன்புறுத்தப்பட்ட இமாம்
(1) இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) (2) இமாம் மாலிக் இப்னு அனஸ் (ரஹ்)
(3) இமாம் அபூ ஹனீபா (ரஹ்) (4) இமாம் ஷாபிஈ (ரஹ்)
(5) இமாம் புஹாரி (ரஹ்)

13. அலி (ரழி) அவர்களைக் கொலை செய்த இப்னு முல்ஜிமை புகழ்ந்து பாடிய கவாரிஜ்களின் ஆஸ்தானக் கவிஞர்
(1) வாஸில் இப்னு அதா (2) இம்ரான் இப்னு ஹத்தான்
(3) ஹஸ்ஸான் இப்னு தாபித் (4) வரக்கத் இப்னு நவ்பல்
(5) அப்துல்லாஹ் இப்னு ரவாஹா

14. மதங்கள் மனிதனை ஆன்மாவைப் பிரதானப்படுத்தியே நோக்குகின்றன. அந்த வகையில் இஸ்லாம் மனிதனை எவ்வாறு நோக்குகிறது?
(1) உடல் + அறிவு + ஆன்மா (2) உயிர் + சக்தி + உடல் (3) உடல் + அறிவு
(4) அறிவு + ஆன்மா + உயிர் (5) உடல் + ஆன்மா

15. "மனிதனுக்கு ஒரு பள்ளத்தாக்கு நிறைய தங்கம் இருந்தாலும் தனக்கு இரண்டு பள்ளத்தாக்குகள் இருக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான்" என்று கூறிய நபி (ஸல்) அவர்கள் அவனது வாயை எது நிரப்பும் என்று கூறினார்கள்?
(1) வெள்ளி நாணயங்கள் (2) மண் (3) தங்கம்
(4) கூழாங்கற்கள் (5) உலகின் கழிவுப் பொருட்கள்

16. ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்களின் வழிமுறையைப் பின்பற்றித் தோன்றிய தரீக்கா எது?
(1) காதிரியா தரீக்கா (2) திஜானியா தரீக்கா
(3) நக்ஷபந்தியா தரீக்கா (4) ஷாதுலிய்யா தரீக்கா
(5) சனூஸியா தரீக்கா

17. "எனக்குரிய ரிஸ்க் எனது ஈட்டியின் நிழலில் தான் இருக்கின்றது" என்பது
(1) ஒரு ஸஹாபியின் கூற்றாகும்.
(2) முஹம்மது (ஸல்) அவர்களின் கூற்றாகும்.
(3) ஒரு இஸ்லாமிய அறிஞரின் கூற்றாகும்.
(4) ஈஸா (அலை) அவர்களின் கூற்றாகும்.
(5) லுக்மான் (அலை) அவர்களின் கூற்றாகும்.

18. 40 மாடுகளை சொந்தமாக வைத்திருக்கும் ஒருவர் ஸகாத்தாகக் கொடுக்க வேண்டியது
(1) இரண்டு வருடம் பூர்த்தியான ஒரு மாடு
(2) ஒரு வருடம் பூர்த்தியான மூன்று மாடுகள்
(3) இரண்டு வருடம் பூர்த்தியான இரண்டு மாடுகள்
(4) இரண்டு வருடம் பூர்த்தியான இரண்டு ஆடுகள்
(5) ஒரு வருடம் பூர்த்தியான இரண்டு ஆடுகள்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**19.** துறைசார் அறிஞர்களால் மிக உறுதியான, ஆதாரபூர்வமான ஹதீஸாக ஏற்றுக்கொள்ளப்படுவது
(1) ஹதீஸ் மர்பூ.ஃ. (2) ஹதீஸ் முதவாதிர் (3) ஹதீஸ் ஆஹாத்
(4) ஹதீஸ் முஅல்லக் (5) ஹதீஸ் மவ்கூப்

**20.** திருமணத்தின்போது மணமகனுக்குரிய நிபந்தனைகளில் ஒன்று
(1) மணப்பெண்ணின் குடும்பத்திற்கு அறிமுகமானவராக இருத்தல்
(2) நிறைந்த செல்வ வளத்தைக் கொண்டிருத்தல்
(3) மணப்பெண்ணுக்கு அஜ்னபியாக இருத்தல்
(4) மணப்பெண்ணுக்கு மஹ்றமியாக இருத்தல்
(5) சுகதேகியாக இருத்தல்

**21.** இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின்படி அஸ்ஹாபுல் புருளில் **அடங்காதவர்**
(1) கணவன் (2) மனைவி (3) மகள்
(4) மகளின் மகள் (5) மகனின் மகள்

**22.** நபி (ஸல்) அவர்களினதும், குலபாஉர்ராஷிதூன்களினதும் காலங்களில் தண்டனைகள் மிகக் குறைவாக அமுல்படுத்தப்பட்டமைக்கான காரணங்களில் ஒன்று
(1) இஸ்லாமிய தண்டனைகள் சட்ட அந்தஸ்து பெறாமை ஆகும்.
(2) தண்டனை முறைகள் தெளிவாக வரையறுக்கப்படாமை ஆகும்.
(3) குற்றங்கள் நிகழாமல் இருக்கக் கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டமை ஆகும்.
(4) குற்றங்கள் நிரூபிக்கப்படுவதில் ஏற்பட்ட தடைகள் ஆகும்.
(5) ஆட்சியாளர்களின் மன்னிக்கும் மனப்பான்மை ஆகும்.

**23.** பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற் கொள்க.
A - அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்பது தொடர்பான வசனங்கள்
B - வானத்தையும் பூமியையும் படைத்தவன் அல்லாஹ்வே என்பது தொடர்பான வசனங்கள்
C - 'எல்லாம் அழிந்து போகும், உமது இறைவனின் திருமுகத்தைத் தவிர' என்ற வசனம்
D - 'அல்லாஹ் யாவற்றையும் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான்' என்ற வசனம்
E - 'ஜின் வர்க்கத்தையும், மனித வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை' என்ற வசனம்
மேலுள்ள கூற்றுகளுள் அல் குர்ஆனின் முதஷாபிஹாத்தான வசனங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, B, E (3) A, C, D (4) B, C, D (5) B, D, E

**24.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.
A - திருமணப் பொருத்தம் பார்த்தல்
B - கொலைக்கு 'தியத்' வழங்குதல்
C - களவெடுத்தவனின் கையைத் துண்டித்தல்
D - திருமணத்தின்போது வலீமா கொடுத்தல்
E - க.ஃபாவை தவாப் செய்தல்
மேலுள்ளவற்றுள் இஸ்லாத்துக்குமுன் அரபிகளிடம் காணப்பட்டு, பின்னர் இஸ்லாம் அங்கீகரித்த உர்ப் வழக்காற்றுகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, C, E

**25.** பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்க.
A - நபி (ஸல்) அவர்களது வபாத்தின் யதார்த்தம் குறித்து அபூபக்ர் (ரழி), உமர் (ரழி) ஆகியோருக்கிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள்
B - நபிக்குப் பின் யாரைக் கலீபாவாகத் தெரிவுசெய்வது என்பதில் தோன்றிய கருத்து வேறுபாடுகள்
C - 'தலாக் சொல்லப்பட்ட பெண்கள் மூன்று குரூ.ஃ. காலம் வரை எதிர்பார்க்கவும்' என்ற வசனத்தில் தோன்றிய கருத்து வேறுபாடுகள்
D - ஸகாத் வழங்க மறுத்தோர் குறித்துத் தோன்றிய கருத்து வேறுபாடுகள்
E - உஹது யுத்தத்தில் எங்கிருந்து யுத்தம் செய்வது என்பதில் தோன்றிய கருத்து வேறுபாடு
மேற்குறிப்பிட்டவற்றுள் நபி (ஸல்) அவர்களது வபாத் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஸஹாபாக்களிடையே தோன்றிய கருத்து வேறுபாடுகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, C, E

[பக். 4 ஐப் பார்க்க

**26.** பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற் கொள்க.

A - இஜ்மாஉ மேற்கொள்ளப்படுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட முஜ்தஹிதுகள் இருக்க வேண்டும்.
B - முஜ்தஹிதுகளின் முடிவுகள் அவர்களின் வபாத்திற்குப் பின்னர்தான் பின்பற்றப்பட வேண்டும்.
C - முஜ்தஹிதுகளின் ஏகோபித்த முடிவு பெறப்படல் வேண்டும்.
D - முஜ்தஹிதுகள் தமது முடிவை வார்த்தைகளினாலும், செயல்களினாலும் புலப்படுத்த வேண்டும்.
E - இஜ்மாஉ என்பது தொடர்ந்தேர்ச்சியாக முஜ்தஹிதுகளின் சொந்த அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகிறது.

மேற்குறித்த கூற்றுகளுள் இஜ்மாஉவிற்கான நியதிகள் தொடர்பிலான சரியான கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, B, D (3) A, C, D (4) B, C, D (5) B, C, E

**27.** பின்வரும் அட்டவணையிலுள்ள பதங்களைக் கவனத்திற் கொள்க.

| | | |
|---|---|---|
| A - அஸபா | B - திம்மி | C - அல் அர்ஹாம் |
| D - மஹ்றம் | E - வஸிய்யத் | F - பைஅத் |
| G - ஹஜ்புன் நுக்ஸான் | H - அல் ஹஜ்ப் | |

மேலுள்ள அட்டவணையில் வாரிசுரிமைச் சட்டத்தோடு தொடர்புபட்ட பதங்களை மாத்திரம் உள்ளடக்கிய விடை யாது?

(1) A, B, C, D, E (2) A, B, D, E, G (3) A, C, E, G, H
(4) B, C, D, E, F (5) B, D, E, G, H

**28.** பின்வரும் அட்டவணையிலுள்ள பதங்களைக் கவனத்திற் கொள்க.

| | | |
|---|---|---|
| A - ஆமில் | B - கிரான் | C - அல்காரிமூன் |
| D - துல் ஹு"லைபா | E - அவ்ராது | F - மீகாத் |
| G - துஹ்ர் | H - குர்பானி | I - உம்ரா |

மேலுள்ள அட்டவணையில் ஹஜ் கடமையோடு தொடர்புபட்ட பதங்களை உள்ளடக்கிய விடை யாது?

(1) A, B, D, F, H (2) B, C, F, H, I (3) B, D, F, H, I
(4) C, D, F, G, H (5) D, E, G, H, I

- **29** முதல் **32** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் உள்ளவை **X** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. எனினும் அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அதன்படி **X** நிரலுக்கேற்ப **Y** நிரலிலுள்ள விடயங்களைப் பொருத்தமான வகையில் தொடர்புபடுத்தும்போது ஒழுங்குமுறையில் அமையும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

**29.**

| X | Y |
|---|---|
| (i) அக்லாக் | A - மாற்றத்திற்குள்ளான அல் குர்ஆனின் சட்டம் |
| (ii) அஸ்பாபுந் நுஸூல் | B - பிரத்தியேகமான வழக்காறுகள் |
| (iii) மன்ஸூக் | C - சமூக நலனை ஆதாரமாகக் கொள்ளல் |
| (iv) இஸ்திஸ்லாஹ் | D - அல் குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டதற்கான காரணங்கள் |
| (v) உர்ப் காஸ் | E - நற்குணங்கள் |

(1) A, B, C, D, E (2) B, C, A, D, E (3) C, A, B, D, E
(4) D, C, A, B, E (5) E, D, A, C, B

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**30.**

| X | Y |
|---|---|
| (i) தவ்ஹீத் உலூஹிய்யத் | A - ஆத்திக நம்பிக்கையுடைய அதிகமானோர் ஏற்றுக்கொள்ளும் கடவுள் கொள்கை |
| (ii) அர்ருஹானிய்யாத் | B - நேரான பாதை |
| (iii) தவ்ஹீத் ருபூபிய்யத் | C - வணங்கப்படுவதற்குத் தகைமையுள்ளவன் அல்லாஹ் மட்டுமே எனும் கொள்கை |
| (iv) ஹிதாயத் | D - அழகிய திருநாமங்களும் தனித்துவமான பண்புகளும் |
| (v) அஸ்மா வஸ்ஸிபாத் | E - மலக்குகள், ஷைத்தான், ஜின் |

(1) A, B, D, E, C (2) B, A, C, E, D (3) C, E, A, B, D
(4) D, A, C, B, E (5) E, C, A, B, D

**31.**

| X | Y |
|---|---|
| (i) கிதாப் அல் உம்மு | A - தஹ்ஸீனிய்யாத்தின் மற்றொரு பெயர் |
| (ii) அல் முதவ்வனா | B - முறையற்ற தலாக் |
| (iii) தக்மீலிய்யாத் | C - சாபமிடுதல் |
| (iv) தலாக் பிதஈ | D - இமாம் ஷாபிஈ (ரஹ்) |
| (v) லிஆன் | E - இமாம் மாலிக் (ரஹ்) |

(1) A, B, C, D, E (2) B, A, C, D, E (3) C, A, B, E, D
(4) D, E, A, B, C (5) D, E, B, A, C

**32.**

| X | Y |
|---|---|
| (i) வெள்ள நீர் கட்டுப்பாட்டு வாசல் (Sluice gate) | A - அறேபியரின் நதி எனவும் அழைக்கப்பட்டது |
| (ii) தெதுரு ஓயா, சோனா நதி | B - மகாவம்சத்தை மொழிபெயர்த்தவர் |
| (iii) டபிள்யூ கைகர் | C - 4000 ஆண்டுகள் பழமையானது |
| (iv) இம்ரஉல் கைஸ் | D - அஜாஇபுல் ஹிந்த் |
| (v) இப்னு ஷஹ்ரயார் | E - ஜாஹிலிய்யக் கால கவிஞர் |

(1) A, C, B, E, D (2) A, C, D, E, B (3) B, A, C, E, D
(4) C, A, B, E, D (5) D, A, E, B, C

**33.** அர்கானுல் கியாஸில் உள்ள நான்கு அடிப்படைகளாவன
(1) அஸ்ல், பரஉ, நக்லி, இஜ்திஹாத் (2) பரஉ, நக்லி, இல்லத், கியாஸ்
(3) அஸ்ல், பரஉ, இல்லத், ஹுக்ம் (4) இல்லத், ஹுக்ம், இஜ்மா, முரக்கப்
(5) நக்லி, இல்லத், ஸஃகூதி, ஸரீஹ்

**34.** வானம், பூமியைப் படைப்பதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் அவற்றை அல்லாஹ் லவ்ஹுல் மஹ்பூழில் எழுதியுள்ளதாக அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது?
(1) 10 000 ஆண்டுகள் (2) 25 000 ஆண்டுகள் (3) 50 000 ஆண்டுகள்
(4) 60 000 ஆண்டுகள் (5) 75 000 ஆண்டுகள்

**35.** உலக வரலாற்றில் அதிக நபிமார்கள் அனுப்பப்பட்ட சமூகம்
(1) கிறிஸ்தவ சமூகம் (2) முஸ்லிம் சமூகம் (3) இந்து சமூகம்
(4) யூத சமூகம் (5) பௌத்த சமூகம்

**36.** ஹஸன் அவனுக்கு சொந்தமாக இருந்த நான்கு ஏக்கர் நிலத்தை, பயிர் செய்வதற்காக றமீஸுக்குக் கொடுத்து, அதன் விளைச்சலில் பாதியை தனக்குத் தர வேண்டுமென கேட்டுக் கொண்டார். இவ்வகை பொருளீட்டல் முறை இஸ்லாத்தில் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) முஷாரகா (2) முழாரபா (3) முராபஹா
(4) இஜாரா (5) முஸாரஆ

[பக். 6 ஐப் பார்க்க

**37.** வியாபாரத்தின்போது வாங்குவோனும் விற்போனும் இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணிச் செயற்படும்போது அவர்களுக்குக் கிடைக்கும் நலன்களில் **உள்ளடங்காதது**
(1) அவர்களது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை ஒரு இபாதத்தாக மாறும்.
(2) அவர்களுக்கிடையில் நல்லுறவு பேணப்படும்.
(3) அவர்களில் ஒருவர் மாத்திரம் பயன்பெற முடியும்.
(4) வர்த்தகம் ஸ்திரத்தன்மையடையும்.
(5) ஹராமான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து மீட்சி கிடைக்கும்.

**38.** ஒருமுறை தலைவிரிகோலமாகவும், தாடியைச் சீர்செய்யாமலும் வந்த ஒருவர் நபி (ஸல்) அவர்களின் போதனையைக்கேட்டு அவற்றைச் சீர்செய்து வந்தபோது நபி (ஸல்) அவர்கள் அவருக்கு என்ன கூறினார்கள்?
(1) தலையில் எண்ணெய் தடவி தலை முடியைச் சீர்செய்து கொள்வது நல்லது.
(2) நானும் இவ்வாறு தலை முடியைச் சீர்செய்திருப்பதை நீர் கவனிக்கவில்லையா?
(3) தொடர்ச்சியாக இவ்வாறு செய்து கொள்வது மிகவும் நல்லது.
(4) உனது குடும்பத்தினரையும் இவ்வாறு தலை முடியைச் சீர்செய்ய பயிற்றுவிப்பீராக.
(5) ஷைத்தானைப்போல தலைவிரி கோலமாக வருவதை விட இப்படி இருப்பது நல்லது.

**39.** ஆடை, அணிகலன்கள் பற்றிய ஆண்களுக்கான சட்டவிதிகளில் **பிழையான** கூற்று யாது?
(1) பட்டாடை, தங்கம் என்பன ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்டுள்ளது.
(2) ஆண்கள் வெள்ளியிலான ஒரு மோதிரத்தைத் தவிர வேறு எந்த அணிகலன்களையும் அணியாதிருத்தல் வேண்டும்.
(3) அவ்ரத்தை மறைக்கக் கூடியதாய் ஆடையை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.
(4) புதிய அழகான ஆடைகள் அணிவதை வழமையாக்கிக் கொள்ளல் வேண்டும்.
(5) பெண்களுக்குரிய பிரத்தியேகமான ஆடை அணிகலன்களை ஆண்கள் அணியாதிருத்தல் வேண்டும்.

**40.** பின்வருவனவற்றில் இஸ்லாத்தில் இத்தா விதியாக்கப்பட்டதன் நோக்கங்களில் **உட்படாதது** எது?
(1) இத்தா என்பது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டுள்ள இபாதத்
(2) இறந்த அல்லது விவாகரத்துச் செய்த கணவன் மூலம் குறித்த பெண் கருவுற்றிருக்கிறாளா என்பதை அறிந்து கொள்வதற்குரிய கால எல்லை
(3) கணவனை இழந்த பெண் துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய கால எல்லை
(4) தொழில் செய்வதற்காக வெளிக்கிட்டு செல்வதை எதிர்பார்த்திருக்கும் கால எல்லை
(5) ஒரு குழந்தையின் பல்துறை சார்ந்த உரிமைகளைத் தீர்மானித்துக் கொள்வதற்கான கால எல்லை

**41.** மஸ்ஜிதுகளை அடிப்படையாகக் கொண்டு பிரபல்யம் வாய்ந்த நூல் நிலையங்கள் உருவான முஸ்லிம் நாடுகள், நகரங்களை உள்ளடக்கிய விடையைத் தெரிவுசெய்க.
(1) மதீனா, எகிப்து, ரோம், டமஸ்கஸ், கைரவான்
(2) டமஸ்கஸ், டியூனிஸியா, மதீனா, லண்டன், எகிப்து
(3) எகிப்து, டமஸ்கஸ், டியூனிஸியா, கைரவான், ஜெரூசலம்
(4) மதீனா, டியூனிஸியா, டமஸ்கஸ், பாரிஸ், கைரவான்
(5) மதீனா, எகிப்து, டமஸ்கஸ், கைரவான், டியூனிஸியா

**42.** மனித உரிமைகளை அறிமுகப்படுத்திய மதீனா சாசனமும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பிரகடனமும் வெளியிடப்பட்ட ஆண்டுகள் முறையே
(1) கி. பி. 610, 1940 ஆகும்.
(2) கி. பி. 612, 1948 ஆகும்.
(3) கி. பி. 622, 1948 ஆகும்.
(4) கி. பி. 625, 1950 ஆகும்.
(5) கி. பி. 630, 1955 ஆகும்.

**43.** இஸ்லாத்தில் தண்டனைகள் வரையறுக்கப்பட்ட குற்றங்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) ஜராஇமுல் கிஸாஸ் வத்தியத்
(2) ஜராஇமுல் ஹுதூத்
(3) அத் த.்.ஸீர
(4) ஸப்உல் மூபிகாத்
(5) அல் - ஜினாயாத்

**44.** பிலால் (ரழி) அவர்களைப் பார்த்து "கறுப்பியின் மகனே" என்று சொன்னபோது, "உம்மிடம் ஜாஹிலிய்யத் உணர்வு இன்னும் நீங்கவில்லை" என நபி (ஸல்) அவர்கள் கடிந்து கொண்ட நபித்தோழர் யார்?
(1) முஆத் இப்னு ஜபல் (ரழி)
(2) அபூதர் (ரழி)
(3) ஜ.்.பர் (ரழி)
(4) அர்கம் (ரழி)
(5) ருபை இப்னு ஆமிர் (ரழி)

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**45.** உமர் (ரழி) ஆட்சிக் காலத்தில் கிளர்ச்சிகளும், உள்நாட்டுக் குழப்பங்களும் உருவாகக் காரணமாக இருந்த பேரரசுகள்

(1) துருக்கிய, பாரசீகப் பேரரசுகள்
(2) பாரசீக, பைசாந்திரியப் பேரரசுகள்
(3) பாரசீக, பிரித்தானியப் பேரரசுகள்
(4) ரோம், மங்கோலியப் பேரரசுகள்
(5) பாரசீக, கிரேக்கப் பேரரசுகள்

- **46** தொடக்கம் **50** வரையிலான வினாக்களில் இரண்டு வகையிலான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுகளுக்குப் பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| இல. | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | ஜாஹிலிய்யக் காலத்தில் அறபு நாடு பாலைவனமாக இருந்ததோடு அங்கு நிலையான ஆட்சி மற்றும் நிருவாக ஒழுங்குகள் இடம்பெற்று வந்தன. | நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து மதீனாவில் ஒரு சிறந்த சமூகம் கட்டியெழுப்பப்பட்டதோடு, அங்கு நிலையான ஓர் அரசும் ஏற்படுத்தப்பட்டது. |
| **47.** | ஒருவர் ஏற்றிருக்கும் மதத்தை அல்லது கொள்கையை பிறர் மீது திணிக்கும் உரிமை எவருக்குமில்லை என இஸ்லாம் கருதுகிறது. | ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பும் கொள்கையை அல்லது மதத்தைப் பின்பற்றுவதற்கு இஸ்லாம் உரிமை வழங்கவில்லை. |
| **48.** | ஜாஹிலிய்யக் காலத்தில் ஆண்கள் உயர்வாகக் கணிக்கப்பட்டதோடு, ஆண் குழந்தை பிறந்தால் மகிழ்ந்து விழா எடுக்கும் பழக்கமும் இருந்து வந்தது. | இஸ்லாத்தின் வருகையைத் தொடர்ந்து பெண்களுக்கு மறுக்கப்பட்டிருந்த மணவுரிமை, விவாகரத்துரிமை, சொத்துரிமை, நீதி கோரும் உரிமை போன்றன அவர்களின் இயல்புக்கேற்ப வழங்கி வைக்கப்பட்டது. |
| **49.** | ஜாஹிலிய்யக் கால அறேபியாவில் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றிய சிலரும் வாழ்ந்து வந்தனர். | ஹுனபா எனப்பட்டோர் ஜாஹிலிய்யக் காலத்தில் பலியிடப்பட்ட பிராணிகளின் மாமிசத்தை உண்ணல், பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தல் போன்றவற்றிலிருந்து விலகியிருந்தனர். |
| **50.** | மனிதனை வகைபிரித்து தராதரப்படுத்துவதற்கான அளவுகோல்களாக நிறம், குலம், சாதி என்பவற்றை இஸ்லாம் பயன்படுத்துகின்றது. | நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணியில் ஈடுபடும் ஒருவர் அதன் தத்துவம், முறைமை, ஒழுங்கு என்பவற்றை அறிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. |

* * *

Past Papers Wiki

Past Papers Wiki

11195

AL/2023(2024)/44/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) ஆதம் (அலை) அவர்களுக்கு ஸுஜூது செய்யுமாறு அல்லாஹுதஆலா யாரிடம் கூறினார்? (02 புள்ளிகள்)

(ii) அல்லாஹ்வின் இருப்பை உறுதிப்படுத்தக்கூடிய பகுத்தறிவுரீதியான **இரண்டு** கருத்துக்களைத் தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)

(iii) 'கழா கத்ர்' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, இதனை விளக்கும் அல் குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரம் ஒவ்வொன்று தருக. (06 புள்ளிகள்)

(iv) இபாதத், முஆமலாத் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

**2.** (i) நபி (ஸல்) அவர்களது காலத்தில், முஸ்லிம்கள் ஹிஜ்ரத் மேற்கொண்ட பிரதேசங்கள் **இரண்டைத்** தருக. (02 புள்ளிகள்)

(ii) நஸ்கின் வகைகள் **நான்கையும்** சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாற்றில் நபி (ஸல்) அவர்களது காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு, விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) தபஉத்தாபிஈன்கள் காலத்தில் ஸுன்னாவின் தூய்மையைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் **இரண்டை** விளக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) எந்த எதிர்பார்ப்புமின்றி ஒரு சகோதரனுக்குக் கடன் கொடுத்து உதவி செய்வதை இஸ்லாம் எவ்வாறு அழைக்கின்றது? (02 புள்ளிகள்)

(ii) பைத்துல்மால் நிதியத்தோடு உமர் (ரழி) அவர்களுக்கிருந்த தொடர்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) சமகாலப் பொருளாதாரப் பிரச்சினைகள் **மூன்றை** அடையாளப்படுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கு இஸ்லாம் பரிந்துரைத்துள்ள வழிகாட்டல்களைத் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

(iv) காப்புறுதி (அத்தஃமீன்) அமைப்புக்களைச் செயற்படுத்துதல் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** (i) இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் **நான்கினை** அல் குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) மகாஸிதுஷ் ஷரீஆவின் **மூன்று** படிநிலைகளையும் குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றை** விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) இஸ்லாத்தில் திருமணத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு, திருமணத்தின்போது தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களை அடையாளப்படுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) சொத்துப் பங்கீட்டு விடயத்தில் இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் நடைமுறைகளைக் குறிப்பிட்டு, வாரிசுரிமைக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) இஸ்லாம் போதிக்கும் சமய, சமூக நல்லிணக்கத்தின் அடிப்படைகளில் **ஐந்தைக்** குறிப்பிட்டு, அவற்றைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) நபி (ஸல்) அவர்கள் உருவாக்கிய மதீனா அரசில் மேற்கொள்ளப்பட்ட சமய, சமூக நல்லிணக்கத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக, கலாசார முன்னேற்றத்தில் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சாதக நிலைமைகளைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) சுதந்திரத்துக்கு முற்பட்ட இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பணிகளை விரிவாக ஆராய்க. (10 புள்ளிகள்)

**8.** பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கத்முன் நுபுவ்வத் (05 புள்ளிகள்)

(ii) பைத்துல் முகத்தஸ் (05 புள்ளிகள்)

(iii) இஸ்லாம் முன்வைக்கும் சமூக நீதி (05 புள்ளிகள்)

(iv) வஹ்ப் இப்னு அபீ ஹப்ஸா (05 புள்ளிகள்)

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**



**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

## ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**

# ORDER GCE A/L SHORT NOTES, MODEL, REVISION BOOKS & PAST PAPERS IN SINHALA, ENGLISH & TAMIL MEDIUM

# LOL BOOK STORE



**CASH ON DELIVERY AND KOKO PAYMENT AVAILABLE**

WHATSAPP – 0717774440

WEBSITE: WWW.LOL.LK

## GET READY FOR YOUR A/Ls WITH LOL BOOK STORE!